**விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)**
**செயல்முறை ஆணைகள்.**
**பிறப்பிப்பவர் : திருமதி. மரு.க.பிர்தௌஸ்பாத்திமா. எம்..டி, (சித்தா)**

ந.க–அ6/6673/2022 நாள்.09–07–2024

பொருள் : கருணை அடிப்படையில் பணி நியமனம் – விருதுநகர் மாவட்டம் – மத்திய ரிசர்வ் காவல் படைவீரர் திரு.R.ஆதிமூலம் (படைவீரர் எண்:850862182 Constable/GD) – படைப்பணியில் பணியாற்றிய போது கடந்த 09.04.1994 அன்று காலமானது – அன்னார் மகன் திரு.A.அருண் த/பெ.(லேட்) ஆதிமூலம் – கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணி நியமனம் செய்யப்பட்டது – 26.09.2022 முற்பகல் பணியேற்பு செய்தது – இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் 26.09.2022 மு.ப. முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:– 1)விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண்..ந.க.அ6/6673/ 2022, நாள். 14.06.2022.
2 ) விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் கடிதம் எண்.ந.க.அ6/6673/ 2022, நாள். 30.01.2023, 20.11.2023
3)அரசாணை (3டி) எண் 36 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை பணிகள் அலகு – 9(2) பிரிவு நாள் 13.06.2024

----------

**ஆணை :-**

விருதுநகர் மாவட்டம், மத்திய ரிசர்வ் காவல் படையில் பணிபுரிந்து பணியின் போது, 09.04.1994 – அன்று காலமான திரு. R.ஆதிமூலம் (படைவீரர் எண்:850862182 Constable/GD) என்பவரின் மகன் திரு. ஆ.அருண் என்பவருக்கு பார்வை (1) இல் காணும் செயல்முறை ஆணைகளின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, தனியர் 26.09.2022 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகின்றார்.

தனியரின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்திட அரசின் ஆணையை பெற்றுத்தரக் கேட்டு பார்வை–2 – இல் காணும் இவ்வலுவலகக் கடிதத்தின் வழி முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை (3) இல் காணும் அரசாணையின்படி தனியரின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியேற்பு செய்த நாளான 26.09.2022 முற்பகல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆகவே, விருதுநகர் மாவட்ட வருவாய் அலகில், இளநிலை வருவாய்

ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் , திரு.ஆ.அருண் என்பவருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் தனியர் பணியேற்பு செய்த நாளான 26.09.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

FIRTHOUSE FATHIMA K
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது)
விருதுநகர்.

பெறுநர்

சம்பந்தப்பட்ட நபர்.

நகல்

1. வருவாய்க் கோட்டாட்சியர், அருப்புக்கோட்டை.
2. "அ6" இருப்புக்கோப்பிற்கு

Signed by
K.firthouse Fathima
Date: 09-07-2024 16:02:17